income
made different

CENTRAL PROVIDENT FUND BOARD SINGAPORE

# சார்ந்திருப்போர் பாதுகாப்புத் திட்டம்
# தகவல் விளக்கப்பிரதி

**1. சார்ந்திருப்போர் பாதுகாப்புத் திட்டம் (DPS) என்பது என்ன?**
சார்ந்திருப்போர் பாதுகாப்புத் திட்டம் (DPS) என்பது ஒரு தாங்கத்தகு ஆயுள் காப்பீட்டுத் திட்டமாகும். இது, காப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இறந்துவிடும் போது, தீராத நோய் அல்லது மொத்த நிரந்தர உடற்குறையினால் அவதியுறும் போது, காப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கும் அவருடைய குடும்பத்தினர்களுக்கும் முதல் சில ஆண்டுகளுக்கு சிறிது பணத்தை வழங்குகிறது. சார்ந்திருப்போர் பாதுகாப்புத் திட்டம் (DPS) என்பது சிங்கப்பூரர்கள் அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசிகளான மசேநி உறுப்பினர்களுக்கு அதிகபட்ச காப்புறுதித் தொகையான $46,000-க்குக் காப்புறுதி அளிக்கின்ற ஒரு விருப்பத்தேர்வான திட்டமாகும். இந்தக் காப்புறுதி உலகம் முழுவதும் வழங்கப்படும். நீங்கள் 60 வயதை அடையும் போது பாலிசி ஆண்டின் இறுதி வரை நீங்கள் காப்பீடு செய்யப்படுவீர்கள்.

தற்சமயம், சார்ந்திருப்போர் பாதுகாப்புத் திட்டத்தை (DPS) கிரேட் ஈஸ்ட்டர்ன் லைஃப் மற்றும் NTUC இன்கம் ஆகிய இரண்டு காப்பீட்டு நிறுவனங்கள் நிர்வகிக்கின்றன. 21 மற்றும் 60 வயதுக்கு இடையிலான, சிங்கப்பூரர்கள் அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசிகளாக உள்ள மசேநி உறுப்பினர்கள் தங்களுடைய முதல் மசேநி சந்தாவைச் செலுத்தும் போது, அவர்கள் தன்னியக்கமாக ஒரு DPS காப்புறுதியைக் கொண்டு நீட்டிக்கப்படுகிறார்கள். 21 வயதிற்குட்பட்ட, ஆனால் 16 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒரு DPS காப்புறுதிக்காக விண்ணப்பம் செய்ய முடியும்.

**2. நான் காப்புறுதிக்காக என்னுடைய ஆரோக்கிய நிலைமையை அறிவிக்க வேண்டியிருக்குமா?**
ஆம், நீங்கள் ஒரு DPS-க்குத் தகுதிபெறுவது, சிறந்த ஆரோக்கியத்தில் இருப்பதைப் பொறுத்ததாகும். பின்வருவன உள்பட, உங்கள் ஆரோக்கியம் தொடர்பான எல்லா தகவல்களையும் நீங்கள் அறிவிப்பதும், முழுமையாக வெளிப்படுத்துவதும் அவசியமாகும்

- உங்களின் எல்லா கடந்தகால மற்றும் தற்போதைய சுகவீனங்கள்;
- நீங்கள் இதற்கு முன்னர் செய்துகொண்ட அல்லது செய்துகொள்ளப் போகும் ஏதேனும் அறுவைச்சிகிச்சை/சிகிச்சை/மருத்துவப் பரிசோதனை; மற்றும்
- ஏதேனும் உடல் அல்லது மன ரீதியான குறைபாடு.

**3. நான் எவ்வளவு தவணைத்தொகையைச் செலுத்த வேண்டும்?**
உங்களுடைய ஆண்டுத் தவணைத்தொகை பின்வருமாறு:

| வயது (ஆண்டுகள்) ஆண்/பெண் | <=34 | 35-39 | 40-44 | 45-49 | 50-54 | 55-59 |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டுத் தவணைத்தொகை | $36 | $48 | $84 | $144 | $228 | $260 |

**4. நான் எவ்வாறு தவணைத்தொகையைச் செலுத்துவது?**
உங்களின் வசதிக்காக, உங்களுடைய மசேநி சாதாரணக் கணக்கு மற்றும்/ அல்லது சிறப்புக் கணக்கில் ("மசேநி கணக்கு") இருந்து ஒவ்வொரு ஆண்டும் தவணைத்தொகை தன்னியக்கமாக கழிக்கப்படுகிறது. உங்களுடைய சாதாரணக் கணக்கில் போதுமான தொகை இல்லை என்றால் மட்டுமே, உங்கள் சிறப்புக் கணக்கில் இருந்து கழிக்கப்படும்.

$46,000 மதிப்பிலான காப்புறுதிக்கான தவணைத்தொகையைச் செலுத்துவதற்கு உங்கள் மசேநி கணக்கில் போதுமான தொகை இல்லை என்றால், நீங்கள் ஒரு குறைவான தொகைக்கு (குறைந்தபட்ச காப்புறுதித்தொகை $5,000 ஆகும்) காப்பீடு செய்துகொள்ளலாம் அல்லது பாலிசியைப் புதுப்பிப்பதற்கான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் வித்தியாசத் தொகையை ரொக்கமாகச் செலுத்தலாம். தவணைத்தொகை செலுத்தப்படவில்லை எனில் உங்கள் பாலிசி முடிவடையும்.

**5. என்னுடைய காப்புறுதி புதுப்பிக்கப்படும் போது எனக்குத் தகவல் தெரிவிக்கப்படுமா?**
உங்களுடைய புதுப்பித்தல் தேதிக்கு 1 மாதத்திற்கு முன்னர் உங்களுக்கு ஒரு அறிவிப்புக் கடிதம் அனுப்பிவைக்கப்படும். முழு தவணைத்தொகையைக் கழிப்பதற்குப் போதுமான சேமிப்புகள் உங்களுடைய மசேநி கணக்கில் இருக்கும்வரை, புதுப்பித்த பிறகு மேற்கொண்டு எந்த அறிவிப்பும் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படாது. உங்கள் மசேநி கணக்கிலிருந்து செலுத்தப்பட்ட தவணைத் தொகையை உங்களுடைய ஆண்டு மசேநி கணக்கு அறிக்கை காண்பிக்கும்.

குறிப்பு: தொடர்புகொள்வதற்கான முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் நீங்கள் அதுகுறித்துத் தகவல் தெரிவிக்க வேண்டும். இதன்மூலம் உங்களுடைய DPS காப்புறுதியின் நிலைமையில் உள்ள ஏதேனும் மாற்றங்களை உங்களுக்குத் தெரிவிக்க முடியும்.

**6. தொகைக் கோரிக்கை நிபந்தனைகள் என்பது என்ன?**
நீங்கள் இறந்தால் அல்லது உங்கள் பாலிசி காலத்தின் போது நீங்கள் தீராத நோய் அல்லது மொத்த நிரந்தர உடற்குறையினால் பாதிக்கப்படும் போது, உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் DPS பாதுகாப்பளிக்கிறது.

12 மாதங்களுக்குள் மரணம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மருத்துவப் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு மருத்துவர் சான்றளிக்கின்ற ஒரு நோயே தீராத நோய் என்று குறிப்பிடப்படுகிறது.

மொத்த நிரந்தர உடற்குறை என்பது எந்தவொரு வேலையையும் நிரந்தரமாகச் செய்வதற்கான இயலாமையை அல்லது இரண்டு கண்கள், இரண்டு கைகாலுறுப்புகள், அல்லது ஒரு கண் மற்றும் ஒரு கைகாலுறுப்பின் நிரந்தர செயலிழப்பைக் குறிக்கிறது.

**7. தொகைக் கோரிக்கை விலக்களிப்புகள் எவை?**
முதல் பாலிசி ஆண்டிற்குள் பின்வரும் நிகழ்வுகள் ஏதேனும் நிகழ்ந்தால், தொகைக் கோரிக்கை நன்மைகள் வழங்கப்பட மாட்டாது:

(a) நீங்கள் வேண்டுமென்றே சுயமாக காயத்தை ஏற்படுத்திக் கொண்டால் அல்லது தற்கொலை செய்துகொண்டால்;
(b) மரண தண்டனை விதிக்கப்படக் கூடிய ஒரு குற்றச் செயலை நீங்கள் செய்தால்; அல்லது
(c) நீங்கள் உள்நோக்கத்தோடு ஒரு குற்றச் செயலை மேற்கொள்வதன் விளைவாக எழும் தொகைக் கோரிக்கை.

பின்வரும் சூழ்நிலைகளிலும் கூட கோரிக்கை நன்மைகள் வழங்கப்படாது:
(d) நீங்கள் காப்புறுதி தொடங்குவதற்கு முன்னர் கடுமையான உடல்நலக் குறைவு, தீராத நோய் அல்லது மொத்த நிரந்தர உடற்குறையினால் அவதியுற்றால்;
(e) நீங்கள் தவறான அல்லது தவறாக வழிநடத்துகின்ற தகவல்களை அளித்திருந்தால்; அல்லது
(f) உங்கள் தொகைக் கோரிக்கையானது, யுத்தங்கள் அல்லது யுத்தம் போன்ற நடவடிக்கைகளின் விளைவாகவோ அல்லது ஏதேனும் கலவரத்தில் பங்கேற்றதன் காரணமாகவோ ஏற்பட்டிருந்தால்.

**8. நான் எவ்வாறு ஒரு தொகைக் கோரிக்கைக்கு விண்ணப்பம் செய்வது?**
(a) இறப்பு
தேவைப்படும் ஆவணங்கள்:
(i) இறப்புக்கான தொகைக் கோரிக்கைப் படிவம் (எங்கள் இணையத்தளத்தில் கிடைக்கிறது)
(ii) இறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட அசல்படி
(iii) வெளிநாட்டில் நிகழ்ந்த இறப்புக்காக குடிநுழைவு, சோதனைச் சாவடிகள் ஆணையத்திடமிருந்து (ICA) கடிதம்
(iv) கோரிக்கையாளரின் அடையாள அட்டை மற்றும் இறந்தவருடனான உறவுமுறையின் சான்று
(v) விபத்து சார்ந்த இறப்புக்கான செய்தித்தாள் வெளியீடு மற்றும்/அல்லது காவல்துறை அறிக்கை

மருத்துவ அறிக்கை, பிரேதப் பரிசோதனை அறிக்கை மற்றும்/அல்லது நச்சியல் அறிக்கை தேவைப்படலாம்.

(b) தீராத நோய் / மொத்த நிரந்தர உடற்குறை
தேவைப்படும் ஆவணங்கள்:
(i) உடற்குறைக்கான தொகைக் கோரிக்கைப் படிவம் (எங்கள் இணையத்தளத்தில் கிடைக்கிறது)
(ii) சிகிச்சை அளிக்கின்ற மருத்துவரின் அறிக்கை (எங்கள் இணையத்தளத்தில் கிடைக்கிறது. தொகைக் கோரிக்கைப் படிவத்தை எங்களிடம் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இது உங்கள் மருத்துவரால் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும்)
(iii) சிகிச்சையளிக்கின்ற மருத்துவரின் அறிக்கைக் கட்டணத்தின் இரசீது (தொகைக் கோரிக்கை இறுதிசெய்யப்பட்ட பிறகு இந்தக் கட்டணத்தை நாங்கள் திருப்பிக் கொடுப்போம்)
(iv) கிடைக்கின்ற எல்லா ஆய்வக மற்றும் பரிசோதனை முடிவுகள்

வேறு ஏதேனும் ஆவணம் தேவைப்பட்டால், நாங்கள் அதற்கேற்ப உங்களுக்கோ, கோரிக்கையாளருக்கோ தகவல் தெரிவிப்போம்.

**9. ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகைக் கோரிக்கை நன்மைகளை யார் பெறுவார்?**
இறப்புக்கான தொகைக் கோரிக்கைக்காக, நீங்கள் ஒரு சார்ந்திருப்போர் பாதுகாப்புத் திட்ட (DPS) வாரிசுதாரர் நியமனத்தைச் செய்திருந்தால், அல்லது எங்களிடம் தெரிவிக்கப்பட்ட ஒரு உயிலைக் கொண்டிருந்தால், வாரிசுதாரர் நியமனம் அல்லது உயிலின்படி (இவற்றில் இறுதியாக நடைமுறைப்படுத்தியது) உங்களுடைய பயனாளர்(கள்) நன்மைகளைப் பெறுவர். வாரிசுதாரர் நியமனம் அல்லது உயில் எதுவும் செய்யப்படவில்லை எனில், முறையான கோரிக்கையாளர்(களுக்கு) நன்மைகள் வழங்கப்படும். முறையான கோரிக்கையாளர் என்பவர் இறந்தவரின் நியமனதாரராகவோ அல்லது குடும்ப உறுப்பினராகவோ இருக்கலாம், எ.கா., வாழ்க்கைத்துணை, பெற்றோர், பிள்ளை அல்லது உடன் பிறந்தவர்.

தீராத நோய் அல்லது மொத்த நிரந்தர உடற்குறைக்கான தொகைக் கோரிக்கை நன்மைகள் உங்களுக்கு வழங்கப்படும். மனத் திறனை இழந்த காப்பீட்டாளர்களுக்கு, கோரிக்கைத் தொகை நீதிமன்ற ஆணைக்கு இணங்க துணைவர்(களுக்கு) அல்லது ஒரு செல்லத்தக்க நீண்டகால அதிகாரப் பத்திரத்தின் எட்டோனீக்கு வழங்கப்படும்.

**10. நான் சார்ந்திருப்போர் பாதுகாப்புத் திட்டத்திற்காக (DPS) எவ்வாறு வாரிசுதாரரை நியமனம் செய்வது?**
நீங்கள் குறைந்தபட்சம் 18 வயது நிரம்பியவராக இருந்து, குறிப்பிட்ட நபர்/ அமைப்புக்கு, அதாவது பயனாளர்(களுக்கு) இறப்புத் தொகைக் கோரிக்கை நன்மைகளை வழங்க விரும்பினால், நீங்கள் DPS வாரிசுதாரர் நியமனப் படிவத்தை (எங்கள் இணையத்தளத்தில் கிடைக்கிறது) எங்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் வாரிசுதாரரை நியமனம் செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள். ஒரு புதிய வாரிசுதாரர் நியமனத்தைச் செய்வதன் மூலம் நீங்கள் பழைய வாரிசுதாரர் நியமனத்தை இரத்து செய்யலாம்.

**11. நீண்டகால அதிகாரப் பத்திரம் என்பது என்ன?**
நீண்டகால அதிகாரப் பத்திரம் என்பது ஒரு சட்ட ஆவணமாகும். இது 21 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய, மனத் திறனைக் கொண்ட ஒரு நபரை, அவர் எதிர்காலத்தில் மனத் திறனை இழக்கும் வேளையில் அவர் சார்பாக முடிவுகளை எடுப்பதற்கும் செயல்படுவதற்கும் எட்டோனீ என்றழைக்கப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைத் தன்னார்வத்துடன் நியமிப்பதற்கு அனுமதிக்கிறது.

DPS குறித்த மேலும் தகவல்களுக்கு, நீங்கள் எங்களுடைய இணையத்தளத்தைப் பார்வையிடலாம், எங்களுடைய நேரடித் தொலைபேசி எண்ணை அழைக்கலாம் அல்லது எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்:
இணையத்தளம்: www.income.com.sg
வாடிக்கையாளருக்கான நேரடித் தொலைபேசி எண்: 6332 1133
மின்னஞ்சல்: healthcare@income.com.sg